IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No.111 /2013

Deposition of witness for DW1

Name : சந்திரன் Caste : -

Father's Name: சின்னப்பகவுண்டர் Calling : -

Village : பெரியகவுண்டர்பட்டி கிராமம், நாகல் Religion : இந்து

Taluk : - Age : 70

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 11 day of July, 2018.

Cross Examination

நானும் வாதியின் தகப்பனார் கோவிந்தராஜனும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். கோவிந்தராஜன் எனக்கு மூத்தவர். ஈஸ்வரியம்மாள் ஞானசேகரனுடைய தாயார் ஆவார். அவர் தற்போது உயிருடன் உள்ளார். தாவா சொத்துக்கள் நாகல் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு ஞானசேகரன் வழக்கு தொடுத்துள்ளார். கோவிந்தராஜ் எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை சுமாராகவும் என்னால் தற்போது கூறஇயலாது. என்னுடைய தகப்பனார் பெயர் சின்னப்பகவுண்டர் ஆகும். தாவா சொத்துக்கள் சின்னப்பகவுண்டருடைய மூதாதையர் சொத்துக்கள் என்றால் சின்னப்பகவுண்டருடைய சொத்துக்கள். சின்னப்பகவுண்டர் கிரையம் பெற்ற சொத்தா என்றால் சின்னப்பகவுண்டருடைய தந்தையார் வழி சொத்துக்கள் அவை. சின்னப்பகவுண்டருக்கு நானும், கோவிந்தராஜ் மட்டுமே வாரிசுதாரர்கள். எங்களுடன் பிறந்த சகோதரிகள் இருவர் உண்டு தற்போது அவர்கள் இறந்த விட்டார்கள். சின்னப்பகவுண்டர் இறந்த தேதியும் எனக்கு நினைவில் இல்லை. சின்னப்பகவுண்டர் இறந்த போது மொத்தம் எத்தனை சொத்தக்கள் அவர் விட்டுவிட்டு சென்றார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. எனக்கும் என்னுடைய சகோதரர் கோவிந்தராஜ்க்கும் எழுத்து மூலமாக பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் எழுத்து மூலமாக ஏற்படவில்லை

வாய்மொழியாக மூலமாக ஏற்பட்டது. வாய்மொழி பாகப்பரிவினை எப்போது எந்த வருடத்தில் ஏற்பட்டது என்றால் என்னால் கூறஇயலாது. என்னுடைய பிராமாணவாக்குமூலத்திலும் நான் மேற்படி பாகப்பிரிவனை தேதியை குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் எனக்கு எந்தெந்த புல எண்களில் எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கள் வந்தது என்றும் கோவிந்தராஜ்க்கு எந்தெந்த புல எண்களில் எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கள் வந்தது என்றும் என்னுடைய பதிலில் நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையிலும் பிரமாவாக்குமூலத்திலும் நான் அதை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கோவிந்தராஜ் 2013 வருடத்திற்கு 25 வருடங்களுக்கு முன்பாக இறந்து விட்டதாக வாதி கூறியுள்ளது சரியா என்றால் எனக்கு சரியாக தெரியாது. சின்னப்பகவுண்டர் இறந்த பிறகு கோவிந்தராஜ்-ம் நானும் பாகப்பிரிவினை எதுவும் செய்துக்கொள்ளாமல் கூட்டாக சொத்துக்களை அனுபவித்து வந்ததாக வாதி கூறினால் பாகப்பிரிவினை ஏற்பட்டு 40 வருடத்திற்கும் மேலாகிறது. 02.07.1974 அன்று மேற்படி கோவிந்தராஜியிடமிருந்து நான் சொத்தை வாங்கியதாக ஒரு ஆவணத்தை நான் தாக்கல் செய்தள்ளேன் என்றால் சரிதான். புல எண்.154-ல் 38 செண்ட் வாங்கியதாக அந்த ஆவணம் உள்ளது என்றால் சரிதான். புல எண் 154-ல் மொத்தம் 5 ஏக்கர் 52 செண்ட் என்றால் சரிதான். மேற்படி 5 ஏக்கர் 52 செண்ட் நிலத்தில் சின்னப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட விஸ்தீரணம் எவ்வளவு என்ன என்றால் எனக்கு ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். கோவிந்தராஜ்க்கு நான் சொல்லும் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் மேற்படி என்னென்ன சொத்துக்கள் எந்தெந்த புல எண்களில் பிரித்து கொடுக்கப்பட்ட விவரம் என்னால் தற்போது கூற முடியாது. தாவா சொத்து மூதாதையர் சொத்து என்ற காரணத்தினால் சட்டப்படி இதை பி.வா.சா.ஆ 1 -ஐ எழுதி கொடுக்க கோவிந்தராஜ்க்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ1 அமலுக்கு வரவில்லை என்று கூறினால் சரியல்ல. அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ2 பட்டா இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும் அது உண்மையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ3 முதல் பிரதிவாதி

ஈஸ்வரியம்மாள் பெயரிலும், ஒரு முனுசாமி மகன் நைனப்பா என்பவரது பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ4 ஆவணம் நிலங்களை அளவீடு செய்வதற்காக கொடுக்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ4-ல் இரண்டு அறிவிப்புக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டாவது அறிவிப்பில் மேற்படி பிரதிவாதி ஈஸ்வரியம்மாள் பெயரிலும், ஒரு முனுசாமி மகன் நைனப்பா என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரிதான். கோவிந்தராஜிக்கும் விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ5 கோவிந்தசாமியின் தகப்பனார் பெயர் ரத்தின கவுண்டர் என்பவர் பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். எனக்கும் விவசாயம் தான் தொழில். கோவிந்தசாமி என்பவரிடமிருந்து பி.வா.சா.ஆ6-ன் படி நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ6-ன் படி சர்வே எண். 152/3ஏ-யில் 67 செண்ட் நிலம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ10 ஆவணம் மகாதேவ கவுண்டருக்கு கிரையம் கொடுத்து சொத்து குறித்த ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ10-ன் படி 30 செண்ட் நிலங்கள் கிரையத்திற்கு உட்படுத்தப்பட்டன என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் தாவா சொத்து அயிட்டம் 1 மதல் 8 அயிட்ட சொத்துக்கள் வரை எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டள்ளேன் என்றும் மேற்படி சொத்துக்களில் புல எண்கள் மற்றும் விஸ்தீரணம் என்னால் சொல்ல இயலுமா என்றால் இயலாது. மேற்படி 1 முதல் 8 அயிட்ட சொத்துக்களுக்கு பட்டா, பாஸ்புத்தக சட்டப்படி பட்டா பாஸ்புத்தகம் நான் எனது பெயரில் பெறவில்லை என்றால் அனைத்திற்கும் என்னிடம் பட்டா பாஸ்புத்தகம் தனித்தனியாக உள்ளது. பி.வா.சா.ஆ11 பட்டா பாஸ்புத்தகத்தின் நகல் என்றால் சரிதான்.. அதில் இரண்டு பட்டா என்று குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். அதிலும் 1 முதல் 8 அயிட்ட சொத்துக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்று கூறினால் சரியல்ல. (இந்த கேள்வி 2-ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு பதிவு செய்யப்படுகிறது). தாவா 2-ம் அயிட்ட சொத்து புல எண். 153/1பி2 என்றும் இது நான் தாக்கல் செய்திருக்கும் பி.வா.சா.ஆ11-ல் இடம்பெறவில்லை என்று கூறினால் சரியல்ல. தாவா 3,4,5,7,8 மற்றும் 9 முதல் 13

வரையிலான அயிட்ட சொத்துக்களுக்கு புல எண். 153/1இ1, 153/1இ3, 154/13, 154/2பி, 152/3சி , 154/4, 153/1சி1, 153/1சி3, 154/3டி, 153/1டி என்றும் இது நான் தாக்கல் செய்திருக்கும் பி.வா.சா.ஆ11-ல் இடம்பெறவில்லை என்று கூறினால் சரியல்ல. பி.வா.சா.ஆ11 பட்டாபுத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மட்டுமே என்னுடையதா என்றால் இல்லை பிற சொத்துக்களுக்கு பத்திரங்கள் உள்ளன. அந்த பத்திரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளேனா என்றால் மீண்டும் சாட்சி மாற்றி பத்திரங்கள் தன்னிடம் இல்லை என்று கூறினார். எனக்கும் என்னுடைய சகோதரர் கோவிந்தராஜ்க்கும் வாய்மொழிபாகப்பிரிவனை ஏதும் ஏற்படவில்லை என்று கூறினால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 முதல் 8 வரை எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. தாவா 13-வது அயிட்ட சொத்துக்கள் எனக்கும் ஈஸ்வரியம்மாளுக்கும் நைனப்பகவுண்டருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. உண்மையாக பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் தாவா 13 அயிட்ட சொத்தக்களையும் பாகப்பரிவினைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் என்று கூறினால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் கூறப்பட்ட சங்கிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.